மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, Ottanchathiram problem is over.

திரு. ப. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம் தனியாக பிரிக்கப்படும் போது சில வட்டங்கள் நெடுந்தொலைவில் அமைந்துவிட்டன. பழனி கோட்டம் வேடசந்தூர் ரோடு இணைக்கப்பட்டு 80 கி.மீ. தொலைவு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அருகில் திண்டுக்கல் 12 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. எனவே, இன்னொரு கோட்டம் நத்தம், வேடசந்தூரை இணைத்து அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தாலுக்கா ஏற்படுத்தப் பட்டபின் வட்டங்கள் பின்வருமாறு அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வட்டாரங்கள் எண்ணிக்கை திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் 3, பழனி 2, ஒட்டன்சத்திரம் 2 : குறுவட்டங்கள் திண்டுக்கல் 7, பழனி 8, ஒட்டன்சத்திரம் 6: கிராமங்கள் திண்டுக்கல் 69, பழனி 78, ஒட்டன்சத்திரம் 63, ஒட்டன்சத்திரம் வட்டம் அமைக்க தொடரினச் செலவாக— இது கேட்காத கேள்விக்கு நானே பதில் சொல்கிறேன்—ரூ. 3.28 லட்சமும், தொடராயின செலவாக ரூ.41.8 லட்சமும் செலவாகும் என்று 1987 ஆம் ஆண்டு கணக்கிடப்பட்டது. அது அதிகரிக்கவும் கூடும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் ; துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, இந்தப் பெயரை மாற்றுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா ? அந்த வார்த்தை தொன்மையான வார்த்தையா அல்லது குறைவான சமூகத்தின் பெயரா என்று தெரியவில்லை. இப்படி வட்டங்களை மாற்றுவதற்கு ஏதாவது சட்டத் திட்டங்களை வைத்திருக்கிறார்களா ? அப்படி மாற்றும்போது அந்த வட்டத்திற்கு ஏதாவது பெயர் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, பெயர் மாற்றுகிற பொறுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடையதாகும். அதிலே நான் தலையிட விரும்பவில்லை.

பேரையூரை தாலுக்கா மையமாக்குதல்.

*2070. திரு. ஆ. அதியமான் ;

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்திலுள்ள பேரையூர் எப்போது தாலுக்கா மையமாக்கப்படும் ?

1990 சனவரி 20]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

இச்செயற் குறிப்பு அரசின் ஆய்வில்உள்ளது.

9.30 மணி

திரு. ஆ. அதியமான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தாலுக்காவிலே இருக்கின்ற பேரையூரையும், கல்லுப்பட்டி ஒன்றியப் பகுதியையும், உசிலம் பட்டித் தாலுக்காவில் இருக்கின்ற சேடப்பட்டி ஒன்றியத்தை யும் இணைத்து புதிய தாலுக்காவாக அறிவிக்கின்ற திட்டம் மதுரை மாவட்ட அரசிதழில் விளம்பரமாக 1–8–1989 அன்று அறி விக்கப்பட்டு இருக்கிறது. பொதுமக்களிடமிருந்து ஏதேனும் ஆட் சேபனைகள் இருக்கின்றனவா என்று மாவட்ட ஆட்சித் தலை வரால் கேட்கப்பட்டு இருக்கிறது. பொது மக்களிடமிருந்து எந்தவிதமான ஆட்சேபனையும் வராத காரணத்தால், 17–8–1989 அன்று பேரையூரைத் தனித் தாலுக்காவாக ஆக்கு கின்ற கோப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். தற்போது அதனுடைய நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, பேரையூரை புதிய வட்டமாக உருவாக்கு வது தொடர்பாக பொதுமக்களிடத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை. ஆனால் தலைமையிடத்தை எங்கு வைப்பது என்பதில் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அரசாணை நிலை எண். 1096, பொதுத் (தேர்தல்-II) துறை, நாள் 30–6–1989ல் 1991ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பதற்கான ஆயத்த வேலைகள் 1989 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி யிலிருந்து தொடங்கப்பட உள்ளதால், வட்டங்களின் எல்லை களில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் 1–10–1989-க்குள் செய்யப்பட வேண்டும் என்றும், தவிர்க்க இயலாத நேர்வுகளில் 31–12–1989-க்குள் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும், 1–1–1990 முதல் 30–6–1991 வரை எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது என்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளன. மற்றும் தற்போது உள்ள நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்படாத திட் டங்களை ஏற்க இயலாது என நிதித்துறை கருத்து தெரிவித்து இருக்கிறது. பெரிய மாவட்டங்களைப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவைகள் தற்போது பிரிக்கப்பட்டு வருவதால், வட்டங்களைப் பிரித்து அமைக்கும் செயற் குறிப்புகளை பெரிய மாவட்டங்கள் முழுவதும் பிரித்து அமைக்கப்பட்ட பிறகு எடுத்துக் கொள்ளலாம் என சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய்த் துறை நிர்வாக ஆணையாளர் கருத்து தெரிவித்து இருக்கிறார். மேற்கூறிய சூழ்நிலைகளில் மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் வட்டங்களைத் திருத்தி அமைத்து, பேரையூரைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டம் அமைக்க அனுப்பப்பட்ட செயற்குறிப்பை தற்போது ஏற்கத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே பல வட்டங்கள் பெரிய அளவிலே இருக்கின்ற காரணத்தால், தமிழகத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தைச் செய்ய, தமிழக அரசு ஒரு கமிஷனை நியமித்து, பெரிய தாலுக்காக்களைப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பதில் அளித்துவிட்டேன். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்க் கோட்டங்களினுடைய மைய அலுவலகங்கள் அந்த வருவாய்க் கோட்டத்தினுடைய பகுதிகளுக்கு உள்ளேயே இருக்க வேண்டும் என்ற நியதி வகுக்கப்படுமா? உதாரணமாக சைதாப்பேட்டை வருவாய்க் கோட்டத்திற்கு வருவாய்க் கோட்ட அலுவலகம் சென்னை நகரத்தினுடைய மையப் பகுதியாக இருக்கின்ற கிரிம்ஸ் ரோடில் இருக்கிறது. இதுபோன்ற இடங்களை மாற்றுவதற்கு ஏதேனும் நெறிமுறைகள் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் அரசு ஆலோசிக்கும்; பரிசீலிக்கும்; முடிவு எடுக்கும்.

சமூக விரோதச் செயல்களால் சேதப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

6344 திரு. பி. என். வல்லரசு:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1989 ஜனவரி முதல் சமூக விரோதச் செயல்களால் சேதப்படுத்தப்பட்ட மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எவ்வளவு?

(ஆ) இந்த சேதாரத்தின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) 1989 ஜனவரி முதல் சமூக விரோதச் செயல்களால் சேதப்படுத்தப்பட்ட மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை 298.

(ஆ) சேதாரத்தினுடைய மொத்த மதிப்பு ரூ.18,11,583.23